உ
சிவமயம்



புதுச்சேரி அரசு
இந்து சமய நிறுவனங்கள் துறை

## ஸ்ரீ பிராணாம்பிகை சமேத
## ஸ்ரீ தர்பாரண்யேஸ்வர சுவாமி தேவஸ்தானம்

நவக்ரஹ அதிபதி, அனுக்ரஹ மூர்த்தி

## ஸ்ரீ சனீஸ்வர பகவான் ஸ்தலம்

**திருநள்ளாறு - 609 607, காரைக்கால் மாவட்டம், புதுச்சேரி மாநிலம்.**

# சனிப்பெயர்ச்சி விழா - 2026

# கும்ப ராசியிலிருந்து மீன ராசிக்கு

**மாசி 22, வெள்ளி ஸ்ரீ விசுவாவசு வருடம் (06.03.2026) காலை 08.24 மணி**

காவிரி பாய்தலால் கவின்பெற்று மிளிரும் சோழ வளநாட்டில் மிகப்பழமையானதும், மூர்த்தி, தலம், தீர்த்த-மென்னும் மூன்றினாலும் மிகச் சிறப்பு வாய்ந்த திருமுறைத்தலம் திருநள்ளாறு ஸ்ரீ தர்பாரண்யேஸ்வரர் சுவாமி திருத்தலத்தில் நவக்கிரஹ அதிபதி ஸ்ரீ சனீஸ்வர பகவான் தனிச் சன்னதி கொண்டு அனுக்கிரஹ மூர்த்தியாக அபய ஹஸ்தத்துடன் கிரகதோஷம், பல்வேறு சாபங்கள் இவைகளால் பீடிக்கப்பட்டுத் துன்புறுவோர்க்கு நிவர்த்தி செய்து பக்தர்களுக்கு அருள்பாலிக்கிறார்.

வேதாங்கமான ஜோதிஷ சாஸ்திரத்தின்படி ராசி மண்டலத்தில் ஸ்ரீ சனீஸ்வர பகவான் 2½ வருடங்களுக்கு ஒருமுறை ஒரு ராசியிலிருந்து மற்றொரு ராசிக்கு இடம் பெயர்கிறார். அந்த நாள் இறையருளால் நிர்மாணிக்கப்பட்ட திருநள்ளாற்றில் சனிப்பெயர்ச்சி விழாவாக கொண்டாடப்படுகிறது. **எதிர்வரும் மாசி 22, வெள்ளி ஸ்ரீ விசுவாவசு வருடம் (06.03.2026) காலை 08.24 மணிக்கு ஸ்ரீ சனீஸ்வர பகவான் கும்ப ராசியிலிருந்து இடம் பெயர்ந்து மீன ராசிக்கு** பிரவேசிக்கும் விழா நடைபெற உள்ளது.

ஸ்ரீ சனீஸ்வர பகவான் பார்வைதான் ஒருவருடைய பாவ - புண்ணியங்களின்படி நன்மைகளையும், தீமைகளையும் வழங்குகிறது. ஏழரைச் சனி அல்லது அஷ்டமச் சனி முடியும் தருவாயில் ஒருவருக்கு ஸ்ரீ சனீஸ்வர பகவான் கொடுக்கும் வாழ்வானது, நிரந்தர யோகமாக அமையும். தொழில் அதிபர் என்கிற தகுதியும், ஏழு தலைமுறைகளுக்காக சொத்துக்களைச் சேர்க்கும் யோகமும், அச்சொத்துக்களை கட்டிக்காக்கும் சக்தியும் இவரிடம் இருந்தே கிடைக்கிறது. ஸ்ரீ சனீஸ்வர பகவான் ஆயுள் காரகனாக விளங்குபவர். வம்சாவழியாக வரும் நோய்களைத் தீர்க்கும் சக்தி படைத்தவர்; மன வைராக்கியத்தை அருள்பவர். கருணைக் கடலனையர்; அணுகிப் பணிந்தவர் விரும்பிய பயன்களை அருள்வதில் காமதேனுவைப் போன்றவர்.

ஸ்ரீ சனீஸ்வர பகவானுக்கு தனியே அஷ்டோத்ரம், சஹஸ்ரநாம அர்ச்சனைகள் உண்டு. சனிப்பெயர்ச்சி விழாவின் போது ஸ்ரீ சனீஸ்வர பகவானுக்கு சிறப்பு அபிஷேக ஆராதனைகள், அஷ்டோத்திர அர்ச்சனை, சகஸ்ரநாம அர்ச்சனை, தில தீப வழிபாடு, அன்னதானம் ஆகியவை பக்தர்களின் நலனுக்காக அவர்களின் பெயரிலும் அவர்களது குடும்பத்தாரின் பெயர்களிலும், வியாபார நிறுவனங்கள் பெயர்களிலும் சிறப்பாக நடத்தப்பட்டு பிரசாதங்கள் தபால் மூலம் அனுப்பிவைக்கப்படும்.

| | | |
|---|---|---|
| 1. சனிப்பெயர்ச்சி அன்று சிறப்பு அபிஷேகம் செய்வதற்கு | ரூ. | 500.00 |
| 2. சனிப்பெயர்ச்சி அன்று சிறப்பு சகஸ்ரநாம அர்ச்சனை செய்வதற்கு | ரூ. | 300.00 |
| 3. சனிப்பெயர்ச்சி அன்று சிறப்பு திலசூர்ண நைய்வேத்ய அர்ச்சனை செய்வதற்கு | ரூ. | 300.00 |
| 4. சனிப்பெயர்ச்சி அன்று சிறப்பு ஒரு மண்டலம் (48 நாட்கள்) அஷ்டோத்திர அர்ச்சனை செய்வதற்கு | ரூ. | 2400.00 |

ஆன்மீக அன்பர்கள் திருநள்ளாறு தேவஸ்தானத்தின் இ- சேவை, இ- நவகிரஹ சாந்தி ஹோம சேவை, இ-காணிக்கை ஆகிய வசதிகளை இணையதளம் www.thirunallarutemple.org மூலம் பயன்படுத்தி சனிப்பெயர்ச்சி விழாவின்போது அருள்மிகு ஸ்ரீ சனீஸ்வர பகவானுக்கு நடத்தப்படும் பல்வேறு சிறப்பு அபிஷேக ஆராதனைகளில் பங்குபெற்று நற்கதி பெற்றுய்யுமாறு அழைக்கின்றோம்.

卐 நள்ளாறா! தியாகேசா! 卐 திருச்சிற்றம்பலம் 卐

| | | |
|---|---|---|
| **ஸ்ரீ-ல-ஸ்ரீ கந்தசாமி தம்பிரான் சுவாமிகள்** | **A.S.P.S. ரவி பிரகாஷ்,** இ.ஆ.ப. | **R. சுப்ரமணியன்** |
| கட்டளை விசாரணை - தருமை ஆதீன பிரதிநிதி | மாவட்ட ஆட்சியர்/தனி அதிகாரி | நிர்வாக அதிகாரி (கோயில்கள்) |

**வங்கி கணக்கு விபரம் : (NEFT/RTGS)**

பெயர் : நிர்வாக அதிகாரி (கோயில்கள்), ஸ்ரீ தர்பாரண்யேஸ்வர சுவாமி தேவஸ்தானம், திருநள்ளாறு- 609607
வங்கி : இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, திருநள்ளாறு **A/c No : 026101000022000 IFSC : IOBA0000261**

**அதிகாரப்பூர்வ இணையதள முகவரி: www.thirunallarutemple.org**
மின்னஞ்சல் : eotemples@gmail.com, sds.kkl@py.gov.in தொலைபேசி: (04368) 236530

**குறிப்பு:** ஸ்ரீ சனீஸ்வர பகவானுக்கு அர்ச்சனைகள் மற்றும் பூஜை செய்ய விரும்புவோர் தேவஸ்தான இணையதளம் மூலமாகவோ அல்லது மணியார்டர் / வரைவோலை மூலமாகவோ உரிய தொகையினை "**நிர்வாக அதிகாரி ஸ்ரீ தர்பாரண்யேஸ்வர சுவாமி தேவஸ்தானம், திருநள்ளாறு-609607**" என்ற முகவரிக்கு நேரடியாக அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். வேறு வெளிநபர்களுக்கு அனுப்ப வேண்டாம் என்றும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இதர தகவல்கள் விரும்புவோர் நிர்வாக அதிகாரி (கோயில்கள்) அவர்களை நேரிலோ அல்லது தொலைபேசியின் மூலமாகவோ தொடர்பு கொள்ளலாம். மேலும் தேவஸ்தான அதிகாரப்பூர்வ இணையதளத்திலும் பெறலாம். ஆன்மீக அன்பர்கள் **காணிக்கை/நன்கொடைகளை** தேவஸ்தான **UPI ID: TnrSaneeswarar@IOB** மூலமாகவும் செலுத்தலாம்.

சக்தி ஆப்செட் பிரிண்டர்ஸ், காரைக்கால் செல் : 99760 52525

Scanned with OKEN Scanner